இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.05.2023) முகாம் அலுவலகத்தில், பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் சாதனை படைத்த திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது அம்மாணவியின் பெற்றோர் உடனிருந்தனர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கைது!

இஸ்லாமாபாத், மே 11- பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் தெஹ்ரீக் இஇன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான் (வயது 70) கைது செய்யப்பட்டார். பயங்கரவாதம், தேசத்துரோகம், மதநிந்தனை, ஊழல், பணமோசடி, வன்முறையை தூண்டுதல் உள்ளிட்ட ஏராளமான வழக்குகளை எதிர்கொண்டுள்ள இம்ரான் கான், வழக்கு விசாரணைக்கு ஆஜராவதற்காக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்திற்கு வந்தபோது, அவரை பாகிஸ்தான் துணை ராணுவ ரேஞ்சர்கள் சுற்றிவளைத்து அதிரடியாக கைது செய்துள்ளனர். காதிர் அறக்கட்டளை வழக்கில் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ராணுவம், உளவு அமைப்பு குறித்து அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான்கான் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.05.2023) முகாம் அலுவலகத்தில், பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் சாதனை படைத்த திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது மாணவிக்கு பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் சிலையை வழங்கி வாழ்த்தினார்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்

தாமிரபரணி - கருமேனி - நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்டம் முடிவடையும்!

நெல்லையில் அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

நெல்லை.மே 11- நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு.நம்பியாறு.கருமேனியாறு நதி நீர் இணைப்பு திட்டம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முழு அளவில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும் என நெல்லை மாவட்டத்தில் நதி நீர் இணைப்பு திட்ட பணிகளை ஆய்வு செய்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நதி நீர் இணைப்பு திட்ட பணிகளை ஆய்வு செய்தார். முதலாவதாக தாமிரபரணி ஆறு, நம்பியாறு, கருமேனியாறு நதிநீர் இணைப்பு திட்டப் பணிகளில் மூன்றாவது நிலையாக நடந்து வரும் நாங்குநேரி அருகே உள்ள கோவன்குளம் பகுதியை சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்.நேரில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

பின்னர் திட்டப் பணிகள் குறித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து நதிநீர் இணைப்பு திட்டத்தின் கடைசி பகுதியான தூத்துக்குடி மாவட்டம் எம்.எல்.தேரி. பகுதியிலும் ஆய்வு செய்தார்.அதன் பின்னர் நெல்லை பொன்னாக்குடியில் நான்கு வழி சாலையின் குறுக்கே நதிநீர் இணைப்பு திட்டத்திற்காக கட்டப்பட்டு

வரும் பாலம் பணிகளை பார்வையிட்டார்.

பின்னர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நெல்லை மாவட்டத்தில் நதிநீர் இணைப்பு திட்டப்பணிகள் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை புயல் வேகத்தில் நடந்து வந்தது.50 சதவீத பணிகள் முடிந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, கடந்த 10 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டு விட்டது.பொது மக்களின் நலனிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முன்னெடுத்து திட்டத்தை விரிவு படுத்தி விரைவாக செயல்படுத்த வேண்டும் என அறிவித்தார்கள்.மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்த பின்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.நெல்லை மாவட்டத்தில் 67.075 கிலோமீட்டர்நீளத்திற்கும்.தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கிலோமீட்டர் நீளத்திற்கு வெள்ளநீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது ஆய்வு செய்ததன் அடிப்படையில் வரும் செப்டம்பர், அக்டோபர் மாதம் மழை காலங்களில் இந்த திட்டத்தின் வாயிலாக தண்ணீர் கொண்டு செல்லலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது 17,002 ஹெக்டேர் புதிய பாசன பரப்பு உள்பட 23040 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டை,நாங்குநேரி, இராதாபுரம்,ஆகிய சட்டமன்ற தொகுதிகளும் தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நதிநீர் இணைப்பு திட்ட பணிகள் முடிவடைந்து முழு பயன்பாட்டிற்கு வரும்.

இந்த திட்டத்திற்கு நிலம் கொடுத்தவர் களுக்கு கடந்த ஆட்சியில் முறையாக பணம் வழங்கவில்லை. தற்போது இடம் கொடுத்தவர்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டு பணம் கொடுக்கப்பட்டு வருகிறது.நிதி ஆதாரத்தை பொறுத்து அணைகள் தூர் வாரப்படும்.கடனாநதி, இராமநதி, இணைப்பு திட்டம் ஜம்புநதி மேல் மட்ட கால்வாய் திட்டம் குறித்து அடுத்த மாதம் தென்காசி மாவட்டம் செல்கிறேன்.அங்கு ஆய்வு செய்து திட்டங்கள் குறித்து முடிவு எடுக்கப்படும். நிதி ஆதாரங்களை பொறுத்து அணைகள் தூர் வாரும் பணி நடத்தப்படும்.பிற மாநிலங்களுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்ல அனுமதி உள்ளது.முறையாக அனுமதிகளை பெற்றுத்தான் கொண்டு செல்கிறார்கள்.கனிம வளங்களை எடுத்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட வாகனங்களை தவிர்த்து ராட்சத கனராக வாகனங்களில் கனிம வளங்கள் கடத்தப்பட்டால் வாகனங்களை பறிமுதல்செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், ஒன்றியச் செயலாளர்கள் ராஜன், ஜோசப்பெல்சி, ஆரோக்கிய எட்வின் மற்றும் தலைமை பொறியாளர் ஞானசேகர், கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ், செயற் பொறியாளர் மாரியப்பன் உள்பட அரசு அலுவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் இடையன்குடியில் தமிழறிஞர் ராபர்ட் கால்டுவெல் நினைவு இல்லத்திற்குச் சென்று அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.அங்குள்ள அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்.

அனைத்து நியாய விலைக்கடைகளிலும்

ஆன்லைன் பரிவர்த்தனை செய்யப்படும்!

சென்னை, மே 11- தமிழ்நாட்டில் மே மாதம் இறுதிக்குள் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் ஜி-பே, பே-டி.எம்., வசதி மூலம் பணப்பரிமாற்றம் செய்யப்பட இருப்பதாக கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் முதன் முறையாக காஞ்சிபுரத்தில் உள்ள 683 நியாய விலைக் கடைகளிலும் க்யூஆர் கோர்டு மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கோவை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தூத்துக்குடி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் யு.பி.ஐ. மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு வாரத்திற்குள் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் யு.பி.ஐ. மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்படும் என கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. எனவே வரும் 31 ஆம் தேதிக்குள் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் ஜி-பே, பே-டி.எம்., யு.பி.ஐ. வசதி செய்து கொடுக்க அனைத்து மண்டல பதிவாளர்களுக்கும் கூட்டுறவுத்துறை உத்தரவிட்டுள்ளது.

கர்நாடகாவில் பிரசாரம் ஓய்ந்த பிறகு வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதா?

பிரதமர் மோடி மீது நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் கோரிக்கை!

புதுடெல்லி, மே 11 - கர்நாடக மாநிலத்தில் நேற்று சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் பிரசாரம் மே 8ஆம் தேதி மாலையுடன் நிறைவு பெற்றது. அதன் பின்னர் வாக்குப்பதிவு முடியும் வரை யாரும் தேர்தல் பணிகளில் ஈடுபடக்கூடாது என தேர்தல் நடத்தை விதிகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் கர்நாடக மக்களுக்கு கடிதம் எழுதினார். அதில், கர்நாடகாவை நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் பணிக்காக உங்கள் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறேன் என கேட்டுக்கொண்டார்.

தேர்தலுக்கு முந்தைய நாளில் பிரதமர் மோடியின் இந்த வேண்டுகோள், தேர்தல் விதிமீறல் என பலரும் கருத்து தெரிவித்தனர். காங்கிரஸ் கட்சியும் கடும் ஆட்சேபம் தெரிவித்தது. இது தேர்தல் நடத்தை விதிகளை அப்பட்டமாக மீறும் செயல் என்று கூறியது. அத்துடன், இந்த விஷயத்தை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் (கர்நாடகா பொறுப்பு) ரன்தீப் சுர்ஜேவாலா தலைமை தேர்தல் ஆணையருக்கு கடிதம் அனுப்பி உள்ளார். அதில், தேர்தல் நடத்தை விதிகளை மீறி, பிரதமர் நரேந்திர மோடி கர்நாடக வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததற்காக, அவர் மீது தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி உள்ளார். சட்டங்கள் பிரதமருக்கு பொருந்துமா இல்லையா? என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

வான்புகழ் திருவள்ளுவரின் நினைவினைப் போற்றும் வகையில்

ரூ.15 கோடி மதிப்பீட்டில் திருவள்ளுவர் திருக்கோயில் மேம்படுத்தப்படும்!

ஆய்வுக்குப் பின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

சென்னை, மே 11- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (09.05.2023) சென்னை, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட வுள்ள திருப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பின் போது "சென்னை, மயிலாப்பூர், முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலுடன் இணைந்த திருவள்ளுவர் திருக்கோயிலுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் திருப்பணிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தினை முழுமையாகப் பார்த்து திருக்கோயிலையும் ஆய்வு செய்தோம்.

அந்த வகையில், திருக்கோயிலின் நுழைவு வாயிலை புதுப்பித்தல், பொற்றாமரை குளம் போன்ற வடிவமைப்பை உருவாக்குதல், அறம், பொருள், இன்பத்திற்குண்டான விளக்கமுறையாக பதாகைகளை உருவாக்குதல், ஏற்கனவே இத்திருக்கோயிலில் அமைந்திருக்கின்ற திருவள்ளுவர் மற்றும் வாசுகி சன்னதிகளை புதுப்பித்தல், திருவள்ளுவரின் பெற்றோர்கள் வடிவமைக்கப்பட்டுள்ள சன்னதியை புதுப்பித்தல், கருமாரியம்மன், சிவன், காமாட்சியம்மன் சன்னதிகளை புதுப்பித்தல், கூடுதலாக இத்திருக்கோயிலின் நூலகத்தினை புதுப்பொலிவுடன் மேம்படுத்துதல், மடப்பள்ளியை புதுப்பித்தல், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தித் தருதல், அர்ச்சகர்கள் குடியிருப்பை புதுப்பித்தல் என ஒட்டுமொத்தமாக திருக்கோயிலை மேம்படுத்திடும் வகையில் ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம்.

வாழ்ந்து மறைந்தாலும், நம்முடைய மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவருக்கு ஒரு கோட்டத்தைக் கண்டார். கன்னியாகுமரியில் வான் உயர வள்ளுவருக்கு சிலையை அமைத்தார். திருக்குறளுக்கு உரை எழுதினார். அந்த வகையில் சுமார் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருவள்ளுவர் கற்சிலை அமைந்திருக்கும் 500 ஆண்டுகளுக்கு மேலான இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் விரும்பி வருகின்ற வகையிலும், சுற்றுலாத்தலமாகவும் மேம்படுத்திடும் வகையிலும் உருவாக்கிட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வழித்தோன்றல் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ரூ.15 கோடியில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் வான்புகழ் திருவள்ளுவரின் நினைவினைப் போற்றுகின்ற வகையில் இத்திருக்கோயில் வடிவமைக்கப்படும்.

இத்திருக்கோயிலின் திருப்பணிகளை மேற்பார்வையிடவும், துரிதப்படுத்தவும் இந்து சமய அறநிலையத்துறையின் உயர்மட்டக் ஆலோசனைக்குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்கரசி அவர்களைப் பணித்திருக்கின்றோம். அவரும் இதில் அதிக அக்கறை எடுத்து விரைவுப் படுத்துகின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், உயர்மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்க்கரசி, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, செயற் பொறியாளர் பெ. கோவிந்தராஜீலு, திருக்கோயில் செயல் அலுவலர் கொளஞ்சி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சட்டமன்றத் தேர்தல்! கர்நாடகத்தில் ரூ.379 கோடி பணம் பறிமுதல்!

பெங்களூரு, மே 11- இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது: கர்நாடக சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணிக்கு தொடங்கியது. கர்நாடகத்தில் கடந்த மார்ச் மாதம் 29ந் தேதி முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. அன்று முதல் சட்டவிரோதமாக பணம் எடுத்து செல்வது, நகைகள், போதைப்பொருள், மதுபானம் கொண்டு செல்வதை கண்காணிக்க சோதனை சாவடிகள், பறக்கும் படைகள் அமைக்கப்பட்டன. கர்நாடகத்தில் இதுவரை விதிகளை மீறியதாக ரூ.379 கோடி மதிப்பீட்டிலான ரொக்கம், தங்க நகைகள், மதுபானம், பரிசு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது கடந்த 2018ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது சிக்கிய பொருட்களை விட 4½ மடங்கு அதிகம். தீவிரமான கண்காணிப்பு, சோதனைகள், அண்டை மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டது, பல்வேறு துறைகளை உள்ளடக்கிய குழுக்கள் அமைக்கப்பட்டது போன்ற நடவடிக்கைகளால் இந்த முறை பணம், பொருட்கள் வினியோகத்தை தடுத்துள்ளோம். இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

திருச்சி தெற்கு மாவட்ட அலுவலகத்தில், மதுரையில் திறக்கப்பட உள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கு தமிழ்நாடு அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு செயலாளர் பூபதி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொருளாளர் முருகசெல்வராஜ் ஆகியோர் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான, அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் ஆயிரம் புத்தகங்களை வழங்கினர். உடன் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் மன்றம் சண்முகநாதன், கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் சிவஞானம் உட்பட பலர் இருந்தனர்.